ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 மாசி மாதம்

# இந்து வேதத் தீ பரவட்டும்!



ஆதிசிவனாரின் வழிவழி வாரிசாக, முத்தமிழின் தலைவராக, முத்தமிழ் ஞானசபைத் தலைவராக, முத்தமிழின் அக ஞானசபைத் தலைவராக, முத்தமிழின் புற ஞானசபைத் தலைவராக, முத்தமிழின் மெய்ஞ்ஞான சபைத் தலைவராக இன்று வாழ்ந்திடும்

பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, ஞாலகுரு, இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடம்,

**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள்.**

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,127ஆம் ஆண்டின் மாசி மாத வெளியீடு.**

**<u>தலைப்பு:</u> இந்துவேதத் தீ பரவட்டும்! திராவிட மாயை அகலட்டும்!**

# <u>உள்ளுறை</u>

1. **"இந்துவேதத் தீ பரவட்டும்! திராவிட மாயை அகலட்டும்!"** - 1994ஆம் ஆண்டில் குருதேவர் அவர்கள் அச்சிட்டு வெளியிட்ட புத்தகத்தின் மறுபதிப்பாக இந்த வெளியீடு உள்ளது.
2. **"சற்றே சிந்தியுங்கள்!..."** - குருதேவர் அவர்கள் பிறம்மயோகிக்கு 13-08-1987இல் எழுதிய நெடிய அஞ்சல் வடிவக் கட்டுரையின் ஒரு பகுதி.

வளர்ப்போம் வளர்ப்போம், இந்துவேதம் வளர்ப்போம்!
அமைப்போம் அமைப்போம், அருளாட்சி அமைப்போம்!
ஒற்றுமைப்படுத்துவோம், ஒற்றுமைப்படுத்துவோம், இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவோம்!
காப்போம் காப்போம், இந்துவேதப் பண்பாட்டைக் காப்போம்!
பரப்புவோம், பரப்புவோம், இந்துவேத நாகரிகத்தைப் பரப்புவோம்!

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

# இந்து வேதத் தீ பரவட்டும். திராவிட மாயை அகலட்டும்.

## பதினெண்சித்தர் மட வெளியீடு

## இந்து வேத முன்னேற்றக் கழகம்

**இந்துவேத வழி ஒன்றுபடுவோம்!**

**உலக அருளாட்சி அமைப்போம்!!**

**மொழி, இன, மத விடுதலை உருவாக்குவோம்!!!**

# பதிப்புரை

இந்து மதம் காத்திட பத்தியுணர்வுள்ள இந்துக்கள் இந்து வேத முன்னேற்ற கழகத்தில் [இ.மு.க.] உடனேயே உறுப்பினராக வேண்டும்.

**பதிப்பக இயக்குநர்கள்:-**

இந்து வேத முன்னேற்ற கழகம் (தென் மண்டலம்)
தலைவர்: சித்தர் உருத்திர தேவர், ச. துரைராசன் B.Sc.,
செயலாளர்: சித்தர் முத்தீசர், வெ. செகதீசன் B.Sc.,
பொருளாளர்: சித்தர் வேத கணநாதர் த. கேசவன் B.Com.,
அமைப்பாளர்: சித்தர் கொங்கணர் இராம. செல்லம்.

இந்து வேதம் பரப்பும் நாயகம் பதிப்பகம்
மதுரை - 625001.

இந்து வேதம் வளர்க்கவும், இந்து மதம் காத்திடவும், இந்துக்களை தயாரிப்பதற்குரிய வேத நூல்களையும், வேதம் சார்ந்த மற்ற நூல்களையும் இன்றைக்கு இந்து மதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடமாக இருக்கின்ற ஞாலகுரு அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்களின் படைப்புக்களையும்; பதினெண்சித்தர்கள் பற்றிய நூல்களையும் வெளியிடும் மாபெரும் பணி சென்னையில் பதினெண்சித்தர் மடத்தில் நிறைவேறி வருகிறது.

இப்பணியின் சுமையினை ஓரளவாவது குறைக்க வேண்டும் என்பதற்காக இ.மு.க.வின் தென்மண்டல நிர்வாகத்தினர் இந்து வேதம் பரப்பும் நாயகம் [இ.வே.ப.நா.] பதிப்பகம் என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கிச் செயல்படுகிறோம். நாங்கள் இந்துக்களுக்கு இந்துமதத்தை மிகக் குறுகிய கால அளவிற்குள் புரிய வைக்கும்

வண்ணம் சிறிய சிறிய வெளியீடுகள் வெளியிடவும்; அன்றாடப் பூசைகளுக்கும், பரிகாரங்களுக்கும், சடங்குகளுக்கும், திருநாள்களுக்கும், திருவிழாக்களுக்கும் உரிய செய்திகளை சிறுசிறு புத்தகங்களாக வெளியிடவும் முன் வந்துள்ளோம். இதற்காக, பத்தி உணர்வுள்ள இந்துக்களை தங்களால் இயன்ற பொருள் முதலீடுகளையும், உடல் உழைப்பு முதலீடுகளையும் கூட்டு முயற்சியாக எங்களுடைய இ.வே.ப.நா. பதிப்பகத்திற்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துச் செயல்படுகிறோம்.

எங்களுடைய கூட்டு முயற்சி ஞானவேந்தர் அருட்கொடை வள்ளல் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டு எங்களுடைய பதிப்பகத்தையே '**<u>இந்துவேதத் தீ பரவட்டும்! திராவிட மாயை அகலட்டும்!</u>**' என்ற நூலுக்கு பதிப்புரை எழுதுமாறு பணித்துள்ளார். இதற்காக, நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம். ஒவ்வோர் இந்துவின் கையிலும் இருக்க வேண்டிய, இருக்கப் போகிற பெருமையை உடைய இந்த நூலில், எங்களுடைய இந்துவேதம் பரப்பும் முயற்சியும் மக்களுக்கு அறிமுகப்படுத்தப்படுவது குருதேவரின் திட்டமிட்ட முயற்சிக்குச் சான்றாகும்.

இன்றைக்கு நாட்டு நடப்பில் வெளிநாடுகளிலிருந்து வந்து குவிகின்ற வகைவகையான உதவிகளால், இந்துவேத மதமான இந்து மதத்திற்கு நேரடியான பாதிப்புக்களும், மறைமுகமான பாதிப்புக்களும் வளர்ந்து வருகின்றன. இதனால், நமது முன்னோர்களான சித்தர்களும், முத்தர்களும், புத்தர்களும், போத்தர்களும், முனிவர்களும், மகான்களும், இருடிகளும், ஞானிகளும்; நமது மண்வளத்திற்கும், இயற்கை வளத்திற்கும், தட்பவெப்ப நிலைகளுக்கும்; வானிலுள்ள ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தேழு விண்மீன்களும் நம் நாட்டு பயிரினங்கள் மீதும், உயிரினங்கள் மீதும் நிகழ்த்தும் ஆட்சிநிலைகளுக்கும்;

ஏற்ற வண்ணம் உருவாக்கிக் கொடுத்திருக்கும் நமது இந்துவேத இந்துமத அகப்பண்பாடுகளும், புறநாகரிகங்களும், வாழ்வியல் மதிப்பீடுகளும், உணவு உடை உறையுள் முதலியவற்றிற்குரிய பழக்க வழக்க நடைமுறைகளும் மிக மிகப் பெரிய பெரிய அளவுகளில் சிதைவுகளேயும், சீரழிவுகளேயும், தலைகீழ் மாற்றங்களேயும், முரண்பாடுகளேயும் பெற்றுவிட்டன, பெற்றுவிட்டன, பெற்றுவிட்டன; பெற்று வருகின்றன, பெற்று வருகின்றன, பெற்று வருகின்றன.

இவற்றின் விளேவாக நம் நாட்டில் படித்தவர், படிக்காதவர் என்ற வேறுபாடின்றி; நகரத்தார் கிராமத்தார் என்ற வேறுபாடின்றி, பணக்காரர் ஏழை என்ற வேறுபாடின்றி, முதலாளி, தொழிலாளி என்ற வேறுபாடின்றி, நூற்றுக்கு எழுபத்தைந்து (75) பேர்கள் அந்நிய மதத்தவர்களேப் போன்று உடை உடுத்தவும், உணவு உண்ணவும், தாய்மொழியை மறந்து அந்நிய மதத்திற்குரிய மொழியிலேயே உரையாடவும், அந்நிய மதத்தவர்களுக்குரிய பழக்க வழக்கங்களேயும் நடைமுறைகளேயும், திருநாள்களேயும், திருவிழாக்களேயும், இவை சார்ந்த பிறவற்றையும் ஏற்று நடைமுறைப்படுத்துபவர்களாகவுமே இருக்கிறுர்கள், இருக்கிறுர்கள், இருக்கிறுர்கள்.

இதனுல், இதனுல், இதனுல் நம் நாட்டவர்கள், நமது இந்துக்கள், நமது இந்தியர்கள் தங்கள் தங்களுடைய இன உரிமைகளேயும், பெருமைகளேயும்; மொழி உரிமைகளேயும், பெருமைகளேயும்; வரலாற்றுப் பாரம்பரியக் கூறுபாடுகளேயும், உரிமைகளேயும், பெருமைகளேயும்; பண்பாட்டுப் பாரம்பரியத்தின் வீரியமிக்க உணர்வுகளேயும்; ... துறந்தவர்களாக, மறந்தவர்களாக, மறுப்பவர்களாக, வெறுப்பவர்களாக, எதிர்ப்பவர்களாக, பகைப்பவர்களாக, மறப்பவர்களாக, இழித்துப் பழிப்பவர்களாக அழித்தொழிக்க தங்களேயும் அறியாமல்? தங்களேயும்

அறியாமல்?? ... தங்களையும் அறியாமல்??? மாறி வருகிறார்கள்! மாறி வருகிறார்கள்!! மாறி வருகிறார்கள்!!!

அதாவது! அதாவது!! அதாவது!!!

நமது இன்றைய மக்களும், வருங்கால மக்களாகப் போகின்ற நமது வாரிசுகளாகிய நமது இளைய தலைமுறையினர்களும்; வேற்று மதத்துக்குரிய நாட்டினரை நம்மைவிட உயர்ந்தவர்களாக, சிறந்தவர்களாக, நமது தலைவர்களாக, நமது வழிகாட்டிகளாக, நமது வழித்-துணைவர்களாக .... போற்றிப் புகழ்ந்து ஏற்று அடிமைகளாகி வருகிறார்கள்.

இந்த அடிமை உணர்வு, நம்மவர்கள் தனிமனித வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அரசியல் வாழ்விலும் தொன்றுதொட்டு நமக்கென இருந்து வரக்கூடிய அனைத்து வகைப்பட்ட தனித் தன்மைகளையும், உணர்வுகளையும், இயல்புகளையும், பண்பாட்டு நடைமுறைகளையும், நம்பிக்கைகளையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும் முழுமையாக இழக்கச் செய்து விடும், இழக்கச் செய்துவிடும், இழக்கச் செய்துவிடும்.

அப்பேரிழப்பால்! .... அப்பேரிழப்பால்!! .... அப்பேரிழப்பால்!!! வருங்காலத்தில் நம்மவர்களே வலியச் சென்று அந்நிய மதங்களுக்குரிய நாட்டவர்களின் தலைமையை ஏற்று, அவர்களின் அடிமைகளாக! எடுபிடிகளாக!! கூலிகளாக!!! வேலிகளாக!!! வாழவேண்டிய காலி நிலை, போலிநிலைதான் உருவாகிடும், உருவாகிடும், உருவாகிடும். அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது! தடுத்து நிறுத்த முடியாது!! தடுத்து நிறுத்த முடியாது!!!

இவற்றையெல்லாம் எண்ணித்தான் நீண்ட நெடிய காடோடி, நாடோடி, .... கடலோடி, ... வாழ்வியல் அநுபவங்களோடு இந்து வேத அடிப்படையில், இந்து மத வாழ்வை நிலைநிறுத்துவதற்காக, பாதுகாப்பதற்காக முறையான, நிறைவான புதிய புதிய நிறுவன

நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கிச் செயல்படப் புறப்பட்டிருக்கிறார் அருட்கொடை வள்ளல், ஞான வள்ளல், ஞான வேந்தர், ஞாலகுரு, குருமகா சன்னிதானம், சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள்.

இவர் நாட்டளவிலும், ஏட்டளவிலும் ஆற்றி வந்துள்ள அளப்பரிய பணிகளால், மக்கள் இந்து வேதத்தைத் தெரிந்து கொள்ளவும், இந்து மதத்தைப் புரிந்து கொள்ளவும் அக்கறையும் ஆர்வமும் கொண்டு ஏறத்தாழ பெரும்பாலான பட்டிதொட்டிகளிலும், குக்கிராமங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும், நகரங்களிலும் இந்துக்களுக்கான சங்கங்கள், சபைகள், மன்றங்கள், கழகங்கள், குழுக்கள், இயக்கங்கள், மடங்கள் முதலிய பல்வேறு வகையான நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்கள் உருவாக ஆரம்பித்து விட்டன, உருவாக ஆரம்பித்து விட்டன, உருவாக ஆரம்பித்து விட்டன.

இப்படி கணக்கற்று உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்காக பொதுவேதமான இந்துவேதம் தழைப்பதற்காக மதங்களுக்கெல்லாம் மூலமதமாக, ஆதார மதமாக, அடிப்படை மதமாக, உயிரோட்ட மதமாக இருக்கின்ற இந்துமதம் பிழைப்பதற்காக உழைக்க உருவாகியிருக்கும் நிறுவன நிர்வாகங்களையும், தனிப்பட்ட பத்தியாளர்களையும், சத்தியாளர்களையும், சித்தியாளர்களையும், முத்தியாளர்களையும் பிணைத்து ஒருங்கிணைப்பதற்காகத்தான் பதினெண்சித்தர் மடத்து இந்து வேதாகம பாடசாலையின் இந்து முன்னேற்றக் கழகம் தனது செயல்திட்டங்களை வெளியிட்டிருக்கிறது, வெளியிட்டிருக்கிறது, வெளியிட்டிருக்கிறது. இவற்றின் ஆதார சுருதிகளை விளக்கும் வண்ணம்தான் இந்துவேத சிந்தனைகள் என்ற தலைப்பில் பல பாகங்களாக, தொடர்நூல்கள் வெளியிடும் முயற்சி பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இம் முயற்சியில் பேராதரவுகள் எல்லாவகைப்பட்டவர்களிடமிருந்தும் வருவதைப் பொறுத்துத்தான்

இந்துவேதத்துக்குரிய பூசைமொழி நூல்கள் நூற்றெட்டும் (108), பூசைவிதி நூல்கள் நாற்பத்தெட்டும் (48), தத்துவ நூல்கள் தொண்ணூற்றுறும் (96), செயல்சித்தாந்த நூல்கள் நூற்றுநாற்பத்தி நான்கும் (144), இந்துமத நூல்கள் முப்பத்தாறும் (36), பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிடும், எழுதி வந்துள்ள குரு பாரம்பரியங்களும், அரச பாரம்பரியங்களும், இலக்கிய பாரம்பரியங்களும், ... அடுத்தடுத்து விரைவில் அச்சேறி நூல்களாக வெளிவந்து அருட்கொடைகளேயும், அறிவுக் கொடைகளேயும் கலேச் செல்வங்களாக உலக மானுட இனங்களின் மேம்பாட்டிற்காக அருளிட முடியும், அருளிட முடியும், அருளிட முடியும் என்பதைச் சொல்லி பதிப்பகத்தின் பதிப்புரையை நிறைவு செய்கிறேம்.

**இந்துவேதம் பரப்பும் நாயகம் பதிப்பகத்தார்.**

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!**

**<u>இந்து வேதத் தீ பரவட்டும்!</u>**

**<u>திராவிட மாயை அகலட்டும்!</u>**

# வரவேற்புரை

சித்தர் ஊழித் தாண்டவர் கு. இரவிமணி B.Sc., B.Tech., ஆசிரியர், இந்து ஆரணம் சித்தர் ஆன்மீக மாத இதழ்.

இன்றைக்கு இந்தியத் துணைக்கண்ட அளவிலும் சரி, மாநில அளவுகளிலும் சரி, அரசியல் துறையிலும், சமுதாயத் துறையிலும், கலை இலக்கியத் துறைகளிலும் சரி ..... நாத்திகக் கருத்தோட்டமும், மத மறுப்புணர்வும், ... **இந்துக்களுக்கு மட்டுமே அதிக அளவில் இருக்கின்றது**.

இது பற்றி, இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் தலைமைக் குருபீடக் குருதேவராக விளங்கும் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் கால் நூற்றாண்டுக் காலத்துக்கும் மேலாக முறையான ஆய்வுகளை நிகழ்த்தியதன் பயனாகத்தான், 1. அருட்பணி விரிவாக்கத் திட்டம், 2. அருட்கோட்டங்கள், 3. இந்து வேதாகம பாடசாலை, 4. சேவலோன் போர்க்கலைப் பயிற்சிச் சாலை, 5. ஓகாசன, யோகாசன, மோகாசன, போகாசனங்களும், குண்டலினி, குண்டளினி, குண்டழினிகளும் கற்பிக்கும் ஆசிரமம், 6. இந்துவேத முன்னேற்றக் கழகம் .... முதலிய பல்வேறு வகைப்பட்ட நிறுவன நிர்வாகங்களைத் தோற்றுவித்தார். இவற்றின் மூலம் இன்றைக்கு இந்துக்களும், மாற்று வேதத்தவர்களும், வேற்று மதத்தவர்களும், நாத்திகர்களும், பகுத்தறிவுவாதிகளும், சீர்திருத்தவாதிகளும் ... குறை கூறிக் குற்றம் சாட்டி வருத்தப்படுகின்ற

சாதி வேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வுகளும், தீண்டாமைகளும், வருணாசிரம தர்மக் கொள்கைகளும், கோட்பாடுகளும், நெறிமுறைகளும், அணுகுமுறைகளும் முற்றிலுமாகத் தூரோடும், வேரோடும் அகற்றப்படும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். இம்முயற்சியில் மாபெரும் வெற்றிகளைப் பெற்று வருகிறார்.

அதாவது,

இந்துவேதத்துக்கும், இந்துமதத்துக்கும் முழுமுதற் தலைமைக் குருபீடமாக விளங்கும் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் ஆதிசிவனாரால் முத்தமிழ் மொழியில் அருளப் பெற்றுள்ள **இந்துவேத நூல்களுக்கும்**, **இந்துமத நூல்களுக்கும்** நான்காவது யுகமான கலியுகத்தில்; கலியுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து நாராயணர் என்ற கடவுளால் சமசுக்கிருத மொழியில் அருளப்பட்டதாகக் கூறப்படுகின்ற ***ஹிந்துவேத நூல்களுக்கும், ஹிந்துமத நூல்களுக்கும்*** இடையில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பங்குக்கு மேல் வேற்றுமைகள், முரண்பாடுகள், வேறுபாடுகள், மாறுபாடுகள் இருக்கின்றன என்ற பேருண்மையும்;

ஆதிசிவனார் **இந்துவேத நூல்களிலும்**, **இந்துமத நூல்களிலும்** **<u>கூறாத</u>** கொள்கைகளும், கோட்பாடுகளும், சடங்குகளும், நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும், புராண இதிகாசங்களும், கதைகளும், சாத்திரங்களும், பூசைவிதிகளும், மந்திரங்களும், பூசைவகைகளும் கலியுகத்தில் நாராயணர் எனும் கடவுள் கூறியுள்ள ***ஹிந்து வேத நூல்களிலும், ஹிந்து மத நூல்களிலும்*** இருக்கின்றன என்ற பேருண்மையினையும்;

இந்துக்களும் மற்றவர்களும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பணியினைத்தான் மேலே குறிப்பிட்ட பதினெண்சித்தர் மடத்துக்கும் பீடத்துக்கும் உரிய அனைத்து வகைப்பட்ட நிறுவனங்களும், நிர்வாகங்களும் ஏட்டுக் கல்வியாகவும், பயிற்சிக் கல்வியாகவும்,

போதக அறிவாகவும், சாதக அறிவாகவும், பட்டறிவாகவும், ஏட்டறிவாகவும் வழங்குகின்றன.

குருமகா சன்னிதானம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் தமது நிறுவன நிர்வாகங்களின் மூலம் தம்மிடம் வரக்கூடியவர்கள் எந்தச் சாதிக்காரர்கள்? உயர்ந்த சாதிக்காரர்களா? தாழ்ந்த சாதிக்காரர்களா? ... என்ற விசாரணையே இன்றி ... வந்தவரின் விருப்பப்படி அவரை,

1. அத்திரியார், 2. சாத்திரியார், 3. சூத்திரியார், 4. தோத்திரியார், 5. நேத்திரியார், 6. வேத்திரியார், 7. வாத்தியார், 8. ஐயா, 9. ஆச்சாறியார், 10. அந்தணர், 11. சன்னிதானம், 12. ஆதீனம், 13. தம்பிரான், 14. மடாதிபதி, 15. ஆச்சாரியார், 16. பண்டாரம், 17. பண்டார சந்நதி, 18. பண்டார சந்நிதி, 19. அரியவாள், 20. கூரியவாள், 21. சீரியவாள், 22. பெரியவாள், 23. நேரியவாள், 24. வீரியவாள், 25. ஏமகோடி பீடம், 26. காமகோடி பீடம், 27. சோமகோடி பீடம், 28. வாமகோடி பீடம் .... என்ற அருட்பட்டங்களுக்குரிய கலைகளில் பயிற்சி பெற்று, பூசாறியாக, குருக்களாக, குருமாராக, குருதேவராக, ... செயல்படச் செய்கிறார்.

இது மட்டுமில்லாமல் யார் வேண்டுமானாலும் 1. பத்தர், 2. பத்தியார், 3. புத்தர், 4. புத்தியார், 5. போத்தர், 6. போத்தியார், 7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன் முத்தர், 10. சீவன் முத்தியார், 11. அருவ சித்தியார், 12. அருவுருவ சித்தியார், 13. உருவருவ சித்தியார், 14. உருவ சித்தியார் ... எனும் பதினான்கு நிலைகளுக்குரியவர் ஆகிடலாம். இவை கடந்து சித்தராகவே ஆகிடுவதற்குரிய எல்லாவகையான வசதிவாய்ப்புக்களையும் தமது குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் எனும் நான்கு வகைப்பட்ட அருளுலகப் பயிற்சிக் கல்வி நிலையங்களின் மூலம் அருளி, அரிய பெரிய சாதனைகளைச் சாதித்து வருகிறார்.

இவ்வாறு இந்துமதம் ஆதிசிவனார் அருளிய இந்துவேதத்தின் மூலம் புதிய வலிவையும், பொலிவையும், வாலிப்பையும், வளத்தையும்

பெற்றிடும் சாதனைகள் எவ்விதமான விளம்பரமோ, ஆரவாரமோ, ஆர்ப்பரிப்போ, பரபரப்போ இன்றி அமைதியாக இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் கருவறையான, பிறப்பிடமான, தாய்வீடான தமிழ்நாட்டில் அல்லும் பகலும் நிகழ்ந்து வருகின்றன.

இப்பேருண்மையினை இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் மூலவர்களாக, காவலர்களாக, வாரிசுகளாக, நாயகங்களாக, தலைவர்களாக வாழையடி வாழையாக வாழ்ந்து வருகின்ற தமிழ் நாட்டவர்கள், தமிழ் இனத்தவர்கள், தமிழ்மொழிக் காரர்கள், தமிழ்ப் பண்பாட்டிற்குரியவர்கள், தமிழ் நாகரிகத்திற்குரியவர்கள், மொழியாலும், வாழிடத்தாலும் தமிழர்களாக மாறியிருப்பவர்கள் உடனடியாக முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! தெரிந்து அறிந்து கொள்ள வேண்டும்! அறிந்து ஆராய்ந்திடல் வேண்டும்! ஆராய்ந்து புரிந்திடல் வேண்டும்! புரிந்து தெளிந்திடல் வேண்டும்! தெரிந்ததை முழுமையாக உணர்ந்து நம்பி ஏற்றுச் செயலாக்கிடல் வேண்டும். அதுதான், அல்லும் பகலும் அயராது இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற்காகவும் ஆயிரமாயிரம் சிந்தனைகளையும், செயல்திட்டங்களையும் உருவாக்கி வரும் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியாருக்கு செலுத்தும் நன்றிக் கடனாகும்.

இதற்காகத்தான் இந்த உலகிலேயே இந்து வேதத்திற்காகவும், இந்து மதத்திற்காகவும் இருக்கின்ற ஒரே நாடான இந்தியாவில், இந்துவேதம் தழைக்கவும், இந்துமதம் பிழைக்கவும் நேரடியாக இந்துவேதத்தின் தாயகமான, பிறப்பிடமான, காப்பிடமான தமிழகத்தில் முழுமையாக இந்துவேத இந்துமத மறுப்புக்கும், வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும், பகைப்புக்கும், நகைப்புக்கும், சிதைவுக்கும், சீரழிவிற்கும் ... காரணமாக இருக்கின்ற நாத்திகப் போக்கையும், நோக்கையும் தடுத்து நிறுத்திட முடிவெடுத்தார். அம்முடிவிற்காக அவர் திருவாய் மலர்ந்தருளி வரும் இந்துவேத இந்துமதப் போதனைகளின் உயிரோட்டமான

## இந்துவேதத் தீ பரவட்டும்!
## திராவிட மாயை அகலட்டும்!

என்ற தலைப்பை எமது வரவேற்புரையின் தலைப்பாக எடுத்துக் கொண்டோம்.

அதாவது, தமிழ்நாட்டில் தமிழ் மக்களுக்கிடையில் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திற்கும் இருக்கின்ற ஆதரவின்மையும், விருப்பமின்மையும், நம்பிக்கையின்மையும், அக்கறையின்மையும், ஈடுபாடின்மையும்; சீர்திருத்தத்தின் பெயராலும், பகுத்தறிவு பெயராலும் வளர்க்கப்பட்டு வருகின்ற வெறுப்புணர்வும், மறுப்புணர்வும், எதிர்ப்புணர்வும், பகைப்புணர்வும்; திராவிடம், திராவிடர், திராவிட இனம், திராவிடர் மொழி, திராவிடப் பண்பாடு, திராவிடர் நாகரிகம், திராவிடர் மதம், ... எனும் சொற்களைச் சொல்லிக் கொண்டு வளர்ந்து வரும், வாழ்ந்து வரும் கழகங்களும், இயக்கங்களும், சங்கங்களும், மன்றங்களும், பாசறை, பாடிவீடு, படை, சேனை, ... முதலிய அமைப்புக்கள் அனைத்தும் திருந்தும்படிச் செய்ய வேண்டும்! திருந்தும்படிச் செய்ய வேண்டும்!! திருந்தும்படிச் செய்ய வேண்டும்!!!; திருத்தப்பட்டேயாக வேண்டும்! திருத்தப்பட்டேயாக வேண்டும்!! திருத்தப்பட்டேயாக வேண்டும்!!! என்பதற்காகவே 1. ஆதிசிவனாரின் வழிவழி வாரிசாக, 2. முத்தமிழின் தலைவராக, 3. முத்தமிழ் ஞானசபைத் தலைவராக, 4. முத்தமிழின் அக ஞானசபைத் தலைவராக, 5. முத்தமிழின் புற ஞானசபைத் தலைவராக, 6. முத்தமிழின் மெய்ஞ்ஞான சபைத் தலைவராக இன்று வாழ்ந்திடும் பதினெண்சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, ஞாலகுரு, இந்துமதத்தின் முழுமுதற் தலைமை ஆச்சாரியக் குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார் அவர்கள் அருளியுள்ள **'இந்துவேதத் தீ பரவட்டும்! திராவிட மாயை அகலட்டும்!'** என்ற நூல் வெளிவந்தேயாக வேண்டும் என்ற விருப்பம் நூறாயிரக் கணக்கான சித்தரடியான்களிடம் தலைதூக்கி நிற்கின்றது.

இந்துவேதத் தீ பரவுவதற்கும், மாயை அகலுவதற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும்? என்பதற்காக ஆதிசிவனார் அருளியுள்ள இந்துவேதமான இருக்கு வேதத்திலிருந்து ஒரே ஒரு வாசகத்தைக் கூறுகிறோம்.

**இருக்கு வேதம்: காண்டம்-1, மண்டலம்-5, நாள் உரைக்கோவை வாசகம்-23:-**

“இப்பூவுலகிற்கு அண்டபேரண்டங்களிலிருந்து வந்து கொண்டிருந்த அருளுலகத்தவர்களான திருக்கல் இந்துவேதமான இருக்கு வேதத்தை இம்மண்ணின் தலைவர்களான மனீசர்களுக்கு **அனாதிக் காலம்** எனப்படுகின்ற நான்கு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது (4,85,920) ஆண்டுக்காலம் பல்வேறு நிலைகளிலிருந்து எடுத்துக் கூறியும், பட்டறிவாக வழங்கியும் உரிய பயன் விளையவில்லை.

இம்மண்ணுலக மனீசர்களுக்கிடையில், உடல் அங்கங்களின் வடிவ அளவு வேறுபாடுகளாலும், உடல் வண்ண வேறுபாடுகளாலும், மொழி வேறுபாடுகளாலும் இயற்கையாக ஏற்பட்டிருந்த எண்ணூறுக்கும் மேற்பட்டிருந்த இனப்பிரிவு வேறுபாடுகளை இணைக்க முடியவில்லை, இணைக்க முடியவில்லை, இணைக்க முடியவில்லை, இணைக்கவே முடியவில்லை, இணைக்கவே முடியவில்லை, இணைக்கவே முடியவில்லை. இவர்களுக்கிடையில் தோன்றிய அருளுலக அநுபவசாலிகளால் தங்கள் தங்கள் போக்கில் ஆளுக்கொரு கடவுளின் பெயரைச் சொல்லி அக்கடவுளின் பெயரால் உருவாக்கப்பட்டிட்ட கதைகள், புராணங்கள், பூசைவிதிகள், நடைமுறைகள், மந்திரங்கள் முதலியவற்றால் உருவாகிட்ட வேதங்களுக்குரிய வேதமதங்களின் அடிப்படையில் ஓயாது, ஒழியாது சண்டைகளும், சச்சரவுகளும், கலவரங்களும், போராட்டங்களும், போர்களும் காட்டுத்தீ போல் திடீர் திடீர் என்று பற்றி எரிந்து பேரழிவுகளை உருவாக்கிக் கொண்டிருந்தன.

இவற்றையெல்லாம் சரி செய்திட அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் ஏழாயிரம் கல் தொலைவிற்கு விரிந்து, பரந்து, கோணல் மாணலாக எண்ணற்ற நீண்ட, குறுகிய, அகன்ற, சுருங்கிய முள்மரத்துச் சிம்புகள் போல் நிலப்பரப்புகளைப் பெற்றிருந்த முற்றாத, கடினப்படாத, மென்மையான, பொருபொருப்பான, புதைமண் பரப்புக்களை மிகுதியாகப் பெற்றுத் திகழ்ந்த இளமுறியாக் கண்டத்தைச் சுற்றியிருந்த தண்ணீர்க் கோள பெரும்பரப்பிற்கு இந்துவேதத்தின் பெயரால் **'இந்துமாக் கடல்'** என்ற பெயர் வைக்கப்பட்டது போல்; இம் மண்ணீசர்களின் மனக்கடலுக்கு **இந்து வேதம்** என்று பெயரிட; என்ற பெயர் நிலைத்திட, இந்து வேதத்தை முறைப்படி இம்மண்ணுலகில் நிலைநாட்டிட முடிவெடுத்தனர்.

அதற்காக பதினெண்சித்தர் குழுவின் தலைவரான ஆதிசிவனாரை இம்மண்ணுலகுக்கு அனுப்பினர். அவரும், தமது பதினெண்சித்தர் குழுவோடும், துணைவர்களான பதினெட்டாம்படிக் கருப்புகளோடும், மற்றவர்களோடும் இளமுறியாக் கண்டத்தில் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியையும் மணீசர்களுக்குக் கற்றுக் கொடுத்து வளர்த்துப் பரப்புவதற்காக, இளமுறியாக் கண்டத்தின் தென்கோடியில் இருந்த பனிமூடிய விண்ணுயர்ந்த மலைமுகடுகளை உடைய குளிர்ச்சி மிக்க மலை எனும் பொருளில் அழைக்கப்பட்ட தென் இமயமலை முதல் வடகோடியில் இந்த இளமுறியாக் கண்டத்தின் பிறப்பு நிலைக்குரிய விந்தின் நிலையை விளக்கும் கருங்கற் பாறைகளையுடைய விந்திய மலைக்கும் இடையே நாற்பத்தொன்பது (49) **திருவிடங்களைத்** தேர்ந்தெடுத்தார்.

இந்த இடங்களில் விண்ணுலக அருளுலகத்தைச் சேர்ந்தவர்களான திருக்களும் (திரு = அருளுலகத்தவர்) ஒன்றுகூடிச் செயல்படக் கூடிய திராவிடங்கள் எனும் நிதி நிர்வாகங்கள் உருவாக்கப்பட்டிட்டன. இவைகள் செயல்பட்டு கிராமங்களையும், ஊர்களையும், நகரங்களையும்

வளர்த்து திராவிட நாடுகள் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அருளாட்சிக்குரிய மொழியான அருளூறு அமுதச் செம்மொழியான முத்தமிழ் மொழியையும் இம்மண்ணுலகில் பரப்பிடும் பணியையும், பாதுகாத்திடும் பணியையும் நிறைவேற்றின.

இப்படி உருவான நாற்பத்தொன்பது (49) திராவிட நாடுகளும், இந்துவேத அருட்செல்வங்களும், இந்துமத அருட்செல்வங்களும் யாண்டும் பரவியிருக்குமாறு செய்யப்பட்ட நிலப்பரப்புகளே இந்தியாக்களாக மாறின. இம்மண்ணுலகைப் பொறுத்தவரை ஒன்பது (9) கோள்கள், பன்னிரண்டு (12) இராசிகள், இருபத்தியேழு (27) விண்மீன்கள் எனும் நாற்பத்தெட்டும் (48) சேர்ந்துதான் அனைத்து வகைப்பட்ட பயிரினங்களையும், உயிரினங்களையும் இயக்குகின்றன என்பதால்தான் ஆதிசிவனார் முதன்முதல் தென் இமயமலை அடிவாரத்தில் இந்து ஆறு, யமுனை ஆறு, கங்கை ஆறு எனும் மூன்று ஆறுகளும் கூடுகின்ற முக்கூடல் பகுதியின் முதன்முதலில் உருவாக்கிய முத்தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்ட **மோகம்சிதரு** நகர், மோகம்சிதரு நகரின் புறநகர்ப் பகுதியான மருதமரக் காட்டிடையே உருவாக்கப்பட்ட **முக்கூடல்** எனும் **ஆலவாய் மருதை மாநகர்** இவையிரண்டுக்கும் அருகிலேயே உருவாக்கப்பட்ட **அருட்பா நகர்** எனும் மூன்று பெருநகரங்கள் மூலம் உருவாக்கப்பட்ட <u>முதல் திருவிடத்தை</u>, <u>திராவிடத்தை</u>, <u>திராவிட நாட்டை</u> **அருளுலக தலைமை இடமாகக்** கொண்டுதான் இதன்கீழ் நாற்பத்தெட்டு (48) திருவிடங்கள், திராவிடங்கள், திராவிட நாடுகள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்த நாற்பத்தெட்டும் முறையே ஒன்பது கோள்களின் பெயர்களையும், பன்னிரண்டு இராசிகளின் பெயர்களையும், இருபத்தியேழு விண்மீன்களின் பெயர்களையும் பெற்றுத் திகழ்ந்தன. இந்த 48 திராவிட நாடுகளையும் சேர்த்து, இவற்றை தலைமைதாங்கி இயக்கிய இமயமலை, முக்கடல், திராவிட நாடு உட்பட மொத்தம் 49 திராவிட நாடுகள் அண்டபேரண்டம் முழுதும் அருளாட்சி செய்யும்

இந்துவேத இந்துமத அருட் கொள்கைகளை, அருட் கோட்பாடுகளை, அருட் குறிக்கோள்களை, அருள் நெறிமுறைகளை, அருள் நடைமுறைகளை, அருள் விதிகளை, அருள் நீதிகளை, அருள் நியதிகளை, அருள் வாழ்வியல் பழக்கவழக்கங்களை முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன, முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன, முறையாகக் கற்பித்து வளர்க்கின்றன.

இத் திருவிடங்களால்தான், இத் திராவிட நிறுவன நிர்வாகங்களால்தான், இத் திராவிட நாட்டவர்களால்தான் இந்த உலக மக்கள் அனைவரையும் இணைத்துப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தி நல் உறவோடும், சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவோடும், அமைதியோடும், மகிழ்வோடும், நிம்மதியோடும், நிறைவோடும் வாழ்வதற்குரிய உலக ஆன்மநேய ஒருமைப்பாடு என்றென்றும் கருக் கொண்டிருக்கச் செய்யப்படுகின்றன. இக்கருவினை வளர்க்கும் தாயாக நாற்பத்தொன்பது திராவிட நாடுகளாலும் உருவாக்கப்படுகின்ற நாற்பத்தொன்பது இந்தியாக்களும் இருக்கின்றன. இந்த நாற்பத்தொன்பது இந்தியாக்களுக்கும் அப்பாற்பட்டு, முரண்பட்டு, வேறுபட்டு, மாறுபட்டு தவறான வேதங்களையும், வேத மதங்களையும் பெற்றுத் திகழும் நாடுகளையும் காலப்போக்கில் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதச் செம்மொழியுமான முத்தமிழ் மொழியின் பூசைமொழிகளும், பூசைவிதிகளும், தத்துவங்களும், செயல்சித்தாந்தங்களும்தான் திருத்திப் பண்படுத்திப் பாதுகாக்கப் போகின்றன.”

என்று எடுத்துக் கூறி இந்த உரையை நிறைவு செய்கிறோம்.

## <u>இந்து வேதத் தீ பரவட்டும்!</u>

## <u>திராவிட மாயை அகலட்டும்!</u>

# <u>அந்தணர் அண்ணல் ஞானச்சாரியாரின் வாழ்த்துரை!</u>

நாட்டு நடப்பில் இந்துவேதம் என்றால் மனித வாழ்வின் அருளொலி, அறிவொலி, பகுத்தறிவொலி, விஞ்ஞான ஒலி, சீர்திருத்த ஒலி, முற்போக்கு ஒலி, புதுமைநாட்ட ஒலி, ... முதலிய ஒலிகள் இல்லாத அல்லது இருக்க முடியாத பழமைவாதமும், வறட்டு வாக்குவாதமும், முரட்டுப் பிடிவாதமுடைய இருண்ட வாழ்க்கையைத் தரக்கூடிய ஒன்று என்ற கருத்துத்தான் வலுவாக இருக்கின்றது. இதற்குக் காரணம் இந்த இருபதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியின் உரிமையையும், பெருமையையும், தமிழர்களின் தன்மானத்தையும், இன ஒற்றுமையையும் காப்பதற்காக தமிழிலக்கிய சிறப்பை அடிப்படையாகக் கொண்டு சமுதாயச் சீர்திருத்தப் பணியைச் செய்திட்ட பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் திராவிடக் கொள்கைதான், திராவிடர் இயக்கம்தான்.

அதாவது சமுதாய அடிப்படையில் ஹிந்து வேதத்தின் <u>மனு தர்மத்தின்</u>படியும், <u>சனாதன தர்மத்தின்</u>படியும்; சாதிமத வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், தீண்டாமைகளும், சூத்திரர் என்று தமிழர் தாழ்த்தப்பட்டதும், தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டதும், தமிழின ஒற்றுமை

பாதிக்கப்பட்டதும் நிகழ்த்தப்பட்டிட்டன. இந்த அநீதியை, இந்தத் தவறை, இந்தப் பழியை, இந்தக் குறையை, இந்த முறைகேட்டை, இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்கப் புறப்பட்டார் பெரியார் ஈ.வெ.ரா. அதனால், அவர் ஹிந்துவேதத்தையும், மனுதர்மத்தையும், வர்ணாசிரமக் கொள்கையையும்; இவை கூறப்பட்ட சமசுகிருத மொழியையும், இவற்றை நாட்டு நடப்பில் செயலாக்கிட்ட பிருமணர்களையும், வேதியர்களையும், ஹிந்துமத வாதிகளையும் கடுமையாக எதிர்த்திட்டார் பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள்.

இப்படியாக தமிழ்மொழியையும், தமிழர்களையும் பாதுகாப்பதற்காகக் குரல் கொடுத்திட்ட பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் தமிழர்களையும், தமிழ்மொழியையும் தாழ்த்திட்ட, புறக்கணித்து ஒதுக்கிட்ட, இழிவுபடுத்தி அடிமைப்படுத்திட்ட சமசுகிருத மொழியையும், சமசுகிருத மொழியில் கூறப்பட்டுள்ள ஹிந்துவேதத்தையும், சனாதன தர்மத்தையும், மனுநீதியையும், வர்ணாசிரமக் கொள்கையையும், ஹிந்துமதத்தின் தலைவர்களான மேட்டுக்குடியினரான பிருமணரையும், வேதியரையும், ஐயரையும், சாத்திரியார்களையும் கடுமையாக எதிர்த்து, விமரிசித்துப் போராடும் நாத்திகரானார். அதாவது பிருமணர்களையும், சமசுகிருத மொழியையும், பிருமணர்களின் ஹிந்துவேதத்தையும், ஹிந்துமதத்தையும் தமிழர்கள் வெறுக்கவும், மறுக்கவும், எதிர்க்கவும் தயாராகும்படிச் செய்திட்டார். இதற்கு அவர் கொடுத்த பெயர் **“திராவிடக் கொள்கை”**, “திராவிடர் உரிமை”, “திராவிடர் பெருமை”, “திராவிடர் பாதுகாப்பு”, “திராவிடர் நலப் பாதுகாப்பு”, “திராவிடர் உரிமை மீட்சி”, “திராவிடர் ஆட்சி”, “திராவிடர் கழகம்” ... முதலியவைகளாகும்.

இப்படியாக திராவிடன், திராவிடர், திராவிட என்ற சொற்கள் மத வெறுப்பை, மத மறுப்பை, மத எதிர்ப்பை, நாத்திகத்தை வளர்க்கக் கூடிய கொள்கையை உடைய சொற்களாகி விட்டன. இதன் அடிப்படையிலேயே திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்

கழகம், அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம், ... என்ற இயக்கங்கள் ஹிந்துமத மறுப்பையும், ஹிந்துமத வெறுப்பையும், ஹிந்துமத எதிர்ப்பையும் தொடர்ந்து காத்து வருகின்றன.

இதனுல், இதனுல், இதனுல், இந்த நாட்டுக்கு வந்துள்ள மாற்று வேதங்களும், வேற்று மதங்களும் மேற்படி திராவிடர் கழகம், இயக்கம், முன்னேற்ற கழகம், பகுத்தறிவு இயக்கம், சீர்திருத்த சங்கம் ... முதலியவற்றில் ஊடுருவல் செய்து அவற்றுக்குள் இருந்து கொண்டு இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித் தனமாகவும், நேரிடையாகத் தாக்கி விமரிசித்து, இழித்துப் பழித்துப் பேசி இந்துக்களை தளர்ச்சியடையச் செய்யவும், மாற்று மதங்களுக்கு மாறும்படிச் செய்யவும் செய்து வருகின்றன.

எனவே, திராவிடம், திராவிடர் என்ற சொற்களால் மக்களிடையே இச்சொல்லுக்கு உரியவர்கள் தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் பாதுகாக்கின்றவர்கள் என்ற ஒரு மயக்கமான, பொய்யான, மாயைக் கருத்தைப் பெற்றுள்ளார்கள். இந்த **திராவிட மாயையை;** அதாவது, 'திராவிட என்ற சொல் கடவுள் மறுப்புக்குரிய சொல்', 'திராவிட என்ற சொல் கடவுளை வெறுப்பதற்குரிய சொல்', 'திராவிட என்ற சொல் கடவுளை எதிர்ப்பதற்குரிய சொல்', 'திராவிட என்ற சொல் கடவுட் கொள்கையை ஒழிக்கும் சீர்திருத்தச் சொல்', 'திராவிட என்ற சொல் மதத்தில் உள்ள மடமைகளையும், மூடநம்பிக்கைகளையும் அகற்றும் பகுத்தறிவுச் சொல்', 'திராவிட என்ற சொல் நாத்திகவாதத்தைக் குறிக்கும் சொல்', 'திராவிட என்ற சொல் ஆத்திகம் என்ற சொல்லுக்கு நேர்மாறுன எதிர்மறைப் பொருளையுடைய சொல்' ... என்ற கருத்துக்கள் திராவிட என்ற சொல்லுக்குப் பொருளாகி விட்டன. **இதுதான் திராவிட மாயை! இதுதான் திராவிட மாயை! இதுதான் திராவிட மாயை!**

ஏனென்றால், ஏனென்றால், ஏனென்றால் இந்த நான்கு யுகங்களின் ஆரம்பத்தில் பதினெண்சித்தர் குழுவின் தலைவரான ஆதிசிவனார் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்து வேதத்தில், இந்துவேத நூல்களில், இந்துவேத வரலாற்று நூல்களில், இந்துவேத இலக்கியங்களில் இந்த திராவிட என்ற சொல்லுக்குரிய பொருள் இன்று நாட்டுநடப்பில் உருவாகியுள்ள பொருள்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாக, வேறுபட்டதாக, எதிரானதாக, நேர்மாறானதாக, மறுப்பானதாக ... இருக்கின்றது, இருக்கின்றது, இருக்கின்றது.

எனவேதான், எனவேதான், எனவேதான், இன்றைக்கு **'திராவிட'** என்ற சொல்லுக்குரிய கருத்துக்கள், மாயமான கருத்துக்கள், மாயையான கருத்துக்கள், தவறான கருத்துக்கள், மோசமான கருத்துக்கள், மோசடியான கருத்துக்கள், பிழையான கருத்துக்கள், கேடு பயக்கும் கருத்துக்கள், தீமை தரும் கருத்துக்கள், அழிவைத் தரும் கருத்துக்கள், .... என்ற பேருண்மையை விளக்கிடவே! என்ற பேருண்மையை விளக்கிடவே!! என்ற பேருண்மையை விளக்கிடவே!!! **திராவிட மாயை அகலட்டும்** என்ற தலைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு என்ற சொல்லுக்கு அருளுலகம், அருட்செல்வம், அழிவற்ற அமரத்துவத்தை உடைய பொருள், அழியாத அல்லது மாறாத இளமையைத் தரும் அமுதம், அருள், கடவுள், தெய்வம், தேவர், தேவதை, ஆண்டவர், புனிதம், இனிமை, மேன்மை, உண்மை, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, தன்மை, ஆத்திகம், ஒண்மை, திண்மை என்று 48 சொற்களில் இந்து வேதத்தில் பொருள் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் ஆதிசிவனார் முத்தமிழ் மொழியையும், முத்தமிழ் மொழியை கற்பிப்பதற்குரிய முத்தமிழ் சங்கத்தையும், இந்துவேதத்தைக் கற்பிக்கின்ற பதினெண்சித்தர் மடத்தையும், இந்துமதத்தை பயிற்றுவிக்கின்ற பதினெண்சித்தர் பீடத்தையும்

தோற்றுவிப்பதற்காகத் தேர்ந்தெடுத்திட்ட இடத்தை திருவிடம், திராவிடம் என்று பெயரிட்டார். இந்தத் திருவிடம் எனும் திராவிடம் என்பது கடலுக்குள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தில் தென்பகுதியில் இருந்திட்ட பனி மூடிய, உயரிய மலைமுகடுகளை உடைய இமய மலையின் அடிவாரத்தில் இந்து, யமுனை, கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் பகுதியில் மருத மரக் காடுகளின் நடுவே, மருதை மாநகர், மோகம்சிதரு நகர், அருட்பா நகர் என்ற மூன்று நகரங்களைக் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒன்றாக அமைத்து உருவாக்கப்பட்டதே இந்தத் திருவிடம் எனும் திராவிடம்.

மருதமரக் காட்டிற்குள் உருவாக்கப்பட்ட மருதை மாநகரில் தோற்றுவிக்கப்பட்ட முத்தமிழ் சங்கத்தில், இளமுறியாக் கண்டத்தில் எண்ணூறு (800) மொழிகளுக்கும் மேற்பட்ட மணீசர்கள் வந்து தமிழ் கற்று தமிழர்கள் ஆனார்கள். அவர்கள் இந்துவேதத்தில் கூறியிருந்த தமிழ்மொழிக்குரிய அகப் பண்பாட்டினையும், புற நாகரிகத்தையும், ஞானத்தையும், அகஞானத்தையும், புறஞானத்தையும், விஞ்ஞானத்தையும், மெய்ஞ்ஞானத்தையும் 9 வகைப்பட்ட அருளூறு பாதுகாப்புக் கலைகளான அருட்கலைகள் 48, ஆயகலைகள் 64, கடவுட் கலைகள் 9, தெய்வீகக் கலைகள் 9, பேய்க் கலைகள் 9, நோய்க் கலைகள் 9, தேய் கலைகள் 9, ஓய் கலைகள் 9, மாய் கலைகள் 9 முதலிய கலைகளைக் கற்றுக் கொண்ட இளமுறியாக் கண்டத்து மணீசர்கள் பக்குவப்பட்ட மனதை உடைய மனிதர்களாக மாறி தமிழர்கள் ஆனார்கள்.

அதாவது, தமிழர்கள் என்றால் முத்தமிழ் மொழியையும், அம்மொழியிலுள்ள அறிவியல்களையும், கலைகளையும், இந்துவேதத்தையும் கற்று பக்குவப்பட்டிட்ட, பண்பட்ட மனதையுடைய மனிதர்கள் என்ற பொருளாகும். எனவே, ஆதிசிவனார் கூறிய இந்துவேதத்தை

மறுப்பவர்களோ! வெறுப்பவர்களோ! எதிர்ப்பவர்களோ! இழிப்பவர்களோ! பழிப்பவர்களோ! மனிதர்கள் இல்லை! மனிதர்கள் இல்லை! மனிதர்கள் இல்லை! தமிழர்கள் இல்லை! தமிழர்கள் இல்லை! தமிழர்கள் இல்லை!

அதாவது தமிழன் என்றால் நான்கு யுகத்தின் ஆரம்பத்தில் ஆதிசிவனார் முத்தமிழ் மொழியில் அருளிய இந்துவேதத்தை ஏற்றுக் கொள்கிறவன்; ஆதிசிவனாரின் இந்துவேத வழியில் வாழ்கிறவன், ஆதிசிவனாரின் இந்துவேதத்தை நம்புகிறவன், ஆதிசிவனாரின் இந்துவேதத்தை விரும்புகிறவன், ஆதிசிவனாரின் இந்துவேதத்தை ஏற்றுக் கொண்டு இந்து வேதியனாக வாழ்பவன் என்று பொருள்.

திருவிடம் எனப்படும் திராவிடத்தில் இருந்திட்ட மருதை மாநகரின் முத்தமிழ் சங்கத்தின் முத்தமிழ் மொழியையும், அருட்பா நகரின் இந்துவேதத்தையும், மோகம்சிதரு நகரின் இந்துமதத்தையும் கற்றுக் கொண்டவர்கள்தான் திருவிடத்தார்கள் => திருவிடர்கள் => திராவிடர்கள் என்று ஆனார்கள். திராவிடர்கள் என்றால் முத்தமிழ் மொழியைக் கற்றவர்கள், இந்துவேதத்தை அறிந்தவர்கள், இந்துமதத்தைப் புரிந்தவர்கள், இந்துவாக வாழுகின்றவர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர்கள், மத நம்பிக்கை உடைய மதவாதிகள், ஆதிசிவனார் முத்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்துவேதம் தழைக்கப் பாடுபடும் இந்து வேதியர்கள், ஆதிசிவனார் முத்தமிழ் மொழியில் அருளிய இந்துமத நூல்களின் அடிப்படையில் அமைந்த இந்துமத வாழ்வில் வாழ்கிறவர்கள், ஆதிசிவனாரின் இந்துமதம் பிழைக்கப் பாடுபடுபவர்கள், ஆத்திகர்களாக வாழுகிறவர்கள், ஆன்மீக வாதிகளாக இருப்பவர்கள், பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள், ... என்பதுதான் உண்மையான பொருள், என்பதுதான் உண்மையான பொருள், என்பதுதான் உண்மையான பொருள்.

இப்படிப்பட்ட பொருள் திராவிடர் என்ற சொல்லுக்கு இருப்பதை இந்த 20ஆம் நூற்றாண்டில் தந்தை பெரியார் தோற்றுவித்த திராவிடர்

இயக்கம் மூடிமறைத்துச் செயல்படுகின்ற மாயையை! மூடிமறைத்துச் செயல்படுகின்ற மாயையை! மூடிமறைத்துச் செயல்படுகின்ற மாயையை! அகற்ற வேண்டும் என்பதற்காகத்தான் **திராவிட மாயை அகலட்டும்!** என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, எனவே, எனவே, இனிமேல் இந்த திராவிடர் என்ற சொல்லைப் பயன்படுத்திக் கொண்டு நாத்திக வாதிகள், கடவுள் மறுப்பாளர்கள், வெறுப்பாளர்கள், எதிர்ப்பாளர்கள், இந்துமத துரோகிகள், விரோதிகள், எதிரிகள், பகைவர்கள், பழிப்பாளர்கள், இழிப்பாளர்கள், கேலி செய்பவர்கள், கிண்டல் செய்பவர்கள் செயல்படக் கூடாது! செயல்படக் கூடாது! செயல்படக் கூடாது! செயல்படவே கூடாது!

அதாவது, அதாவது, அதாவது **திராவிடர்** என்றால் ஆத்திகவாதிகள், இந்துமதவாதிகள், பத்தியாளர்கள், இந்துமத நம்பிக்கையாளர்கள் என்றுதான் பொருள்படும். எனவே நாத்திகர், கடவுள் மறுப்பாளர், வெறுப்பாளர், எதிர்ப்பாளர், இந்துவேத மறுப்பாளர், வெறுப்பாளர், எதிர்ப்பாளர்; திராவிடர் அல்லது திராவிட என்ற சொல்லின் பெயரால் எந்தவித கழகத்தையோ, சங்கத்தையோ, நிறுவனத்தையோ உருவாக்கக் கூடாது! பயன்படுத்தக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! அதாவது **திராவிட மாயை அகலட்டும்! திராவிட மாயை அகற்றப்படட்டும்!**

இப்படி திராவிட மாயையை அகற்றுவதற்காகவே **இந்துவேதத் தீ பரவட்டும்!** என்ற முழக்கம் தரப்பட்டிருக்கிறது.

இந்து வேதத்தை தீ என்று கூறுவதற்கு காரணம் இந்துவேதத்தின் கருத்துச் சுடர்கள் ஒளிபரப்பித்தான் மனித வாழ்வின் இருள்கள் அகற்றப்பட்டன, அகற்றப்பட்டன, அகற்றப்பட்டன, அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன, அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன, அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்துவேதம் ‘தீ’ என்று குறிப்பிடப்பட்டிருப்பதற்குக் காரணம் இந்து வேதத்தின் கருத்துக்கள்தான் மனித வாழ்வில் இருந்த தீமைகள், கடுமைகள், கொடுமைகள், துன்பங்கள் முதலிய அனைத்தையும் அழித்தொழித்து எரித்துச் சாம்பலாக்கி விட்டன. இதே கருத்தில்தான் ‘**<u>இந்துவேதத் தீ பரவட்டும்!</u>**’ என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

அதாவது, அதாவது, அதாவது, இந்து வேதம் பரப்பப்படுவதன் மூலம்தான் திராவிட மாயை எனும் இருள் அகற்றப்படும் என்றும்; திராவிட என்னும் சொல்லின் பெயரால் உள்ள கழகங்களாலும், இயக்கங்களாலும், சங்கங்களாலும், மன்றங்களாலும், கட்சிகளாலும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கேடுகள், கொடுமைகள், கடுமைகள், இன்னல்கள், ஏமாற்றுக்கள், தொல்லைகள், துன்பங்கள் முதலிய அனைத்தையும் எரித்து அழித்துச் சாம்பலாக்கிடும், அழித்தொழிக்கும் ஆற்றல் இந்துவேதமெனும் தீக்குத்தான் உண்டு, இந்துவேத கருத்துத் தீக்குத்தான் உண்டு, இந்துவேத செய்தி தீக்குத்தான் உண்டு, இந்துவேத போதனை தீக்குத்தான் உண்டு, இந்துவேத சாதனை தீக்குத்தான் உண்டு, இந்துவேத சிந்தனை தீக்குத்தான் உண்டு. அதாவது, அதாவது, அதாவது இந்துவேதத் தீ பரவினால்தான் திராவிட மாயை அகலும், திராவிட மாயையால் விளைந்த எல்லாவிதமான கேடுகளும், கடுமைகளும், கொடுமைகளும், துன்பங்களும், ஏமாற்றுக்களும் தடுக்கப்பட்டு அகற்றப்பட்டிடும், தடுக்கப்பட்டு அகற்றப்பட்டிடும், தடுக்கப்பட்டு அகற்றப்பட்டிடும்.

# இந்துவேதம்

இன்று கிறித்துவ ஆண்டுக் கணக்கின்படி 1994ஆம் ஆண்டு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால், அண்டபேரண்டங்களை ஆளுகின்ற பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகப் பயிரினங்களையும், உயிரினங்களையும் காக்க இந்துமதத்தை அநுபவப்பூர்வமாக பட்டறிவாக இம்மண்ணுலகத்திற்கு அளித்திட்ட காலக்கணக்கு இந்துமத ஆண்டுக் கணக்கின்படி 43,73,095 ஆண்டுகள் என்று குறிக்கப்படுகின்றது.

இதற்குரிய இந்துவேதம் இம்மண்ணுலகுக்கு என அனுப்பப்பட்ட 1) பதினெண்சித்தர்கள் குழு, 2) பதினெட்டாம்படிக் கருப்பர்கள் குழு, 3) 48 வகைப்பட்ட கடவுளர்கள் குழு, 4) 48 வகைப்பட்ட வழிபடு நிலையினர்கள் குழு, 5) 48 வகைப்பட்ட சித்தர்கள் குழு என்ற ஐந்து குழுக்களின் முழுமுதற் தலைவராக, குவலய குருபீடமாக, இந்துவேத நாயகமாக, இந்துமதத் தந்தையாக, பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக, பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாக, கருகுல ஆதீனமாக, கருமூலப் பண்டாரமாக, அனாதி ஆதி சத்திகள் கடந்த தம்பிரானாக, அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியாராக நியமிக்கப்பட்டிட்ட அல்லது அனுப்பப்பட்டிட்ட ஆதிசிவனாரே அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியும், கடவுளர் மொழியும், தேவர் தேவதை மொழியும், தெய்வ மொழியும், ஆண்டவர் மொழியும், வேத மொழியுமான முத்தமிழ் மொழியில் இந்து வேதத்தை அருளினார். இது முதல் யுகக் கணக்குகள் ஆரம்பித்தன.

| | |
|---|---|
| முதல் யுகமான கீரன் உகம் (கிரேதா யுகம்) | 17,28,080 |
| 2வது யுகமான தீரன் உகம் (திரேதா யுகம்) | 12,90,000 |
| 3வது யுகமான தூரன் உகம் (துவாபர யுகம்) | 8,64,000 |
| 4வது யுகமான கலியன் உகம் (கலியுகம்) | 5,095 |
| | 38,87,175 |

ஆக மொத்தம் ஆதிசிவனுரால் அருளூறு செம்மொழியான முத்தமிழ் மொழியில் அருளப்பட்டு 38,87,175 ஆண்டுகள் ஆகின்றது. இது இந்துவேத ஆண்டாகும்.

ஆனுல், ஆனுல், ஆனுல் கலியுகம் பிறந்து 2000 ஆண்டுகள் கழித்துத்தான் நாராயணர் என்பவர் சமசுகிருத மொழியில் ஆதிசிவனுரின் **இந்துவேதத்தை** பின்பற்றி ***ஹிந்துவேதம்*** என்ற ஒன்றை எழுதினுர். இந்த சமசுகிருத ***ஹிந்து வேதத்தில்***தான் சாதி வேறுபாடுகள், சாதி உயர்வு தாழ்வுகள், தீண்டாமைக் கொடுமைகள், வர்ணுசிரம தர்மங்கள், சனுதன தர்மங்கள், மனிதற்குரிய மனு நீதி, மனித அறிவுக்கு அப்பாற்பட்ட செய்திகளை உடைய புராண இதிகாசங்கள், தேவதைக் கதைகள், பயனற்ற புரியாத சாத்திர சம்பிறதாயங்கள், சடங்குகள், மந்திரங்கள் முதலியவை இருக்கின்றன.

இவையெல்லாம் ஆதிசிவனுரின் **இந்துவேதத்தில்** இல்லை. ஆதிசிவனுரின் இந்துவேதத்தில் இம்மண்ணுலகுக்குரிய நீதிகள் எனும் பெயரில் **மனு நீதி** (மண் + நீதி) என்ற நீதி நூல் இருக்கிறது. இதை சமசுகிருத ***ஹிந்து வேதத்தில்*** மனிதருக்குரிய நீதி **மனு நீதி** என்று பெயரிட்டு தமிழில் உள்ள மனு நீதியில் இல்லாத செய்திகளையெல்லாம் எழுதி வைத்திருக்கிறுர்கள்.

எனவே, எனவே, எனவே 38,87,175 ஆண்டுகளுக்கு முன்னுல் ஆதிசிவனுர் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியில் அருளிய **இந்துவேதம்** வேறு, இன்றைக்கு 3000

ஆண்டுகளுக்கு முன்னல் நாராயணர் என்பவர் சமசுகிருத மொழியில் அருளிய ***ஹிந்துவேதம்*** வேறு என்ற உண்மையை இந்த **'இந்து வேதத் தீ பரவட்டும்!'** என்ற நூல் பரப்புகிறது, பரப்புகிறது, பரப்புகிறது.

எல்லோரும் ஆதிசிவனுர் தமிழ்மொழியில் அருளியுள்ள இந்துவேதம் மனித வாழ்விற்கு இன்றியமையாதது, பகுத்தறிவுப் பூர்வமானது, மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவுவது, மனிதர்களுக்கு ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், சமத்துவத்தையும், சகோதரத் தத்துவத்தையும், சமாதானத்தையும், அன்பையும், தனிமனிதப் பண்பாட்டையும், குடும்ப அமைப்பையும், சமுதாயக் கட்டமைப்பையும், அரசியல் நிர்வாகத்தையும், இம்மண்ணுலக நீதியையும் வழங்குகின்ற ஒன்று, வழங்குகின்ற ஒன்று, வழங்குகின்ற ஒன்று என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலம்: 1994இல் அச்சிட்ட புத்தகம்.//**

# சற்று சிந்தியுங்கள்!....

"... ஆர்வமிக்க நண்பா! நமது வளர்ச்சியில் வளமும், விரைவும், விரிவும் தேவையென்ற உயரிய உணர்வால்; தாங்கள் தங்களுடைய கருத்தை மிக நாகரிகமாக வெளிப்படுத்தியிருந்தீர்கள்; "..... ஐயா! மக்கள் நம்மைச் சுடுகாட்டுப் பூசைக்காரரர்கள், மந்திரவாதிகள், பூசாறிகள் என்ற கண்ணோட்டத்தில்தான் பார்க்கிறார்கள் என்பதால்; நமது செயல்நிலைகளில் மாற்றங்களையும், புதிய திட்டங்களையும் அறிவித்தால் நல்லது, புதியவர்கள் விரைந்து நமது இயக்கத்தில் சேர்ந்தால்தான், நமது வளர்ச்சியில் விரிந்து பரந்துபட்ட உயரியநிலை உருவாகும் ...." என்ற இந்தக் கருத்தோட்ட வாசகம் சிறப்பாக உள்ளது.

நண்பா! நம்மைப் பூசாறிகள்! சாமியார்கள்! மந்திரவாதிகள்! குறிகாரரர்கள்!.... என்று குறை கூறுபவர்களையும், கேலி செய்பவர்களையும், அச்சநிலை அறிமுகம் செய்பவர்களையும் பற்றிச் சற்று ஆழமாகச் சிந்தியுங்கள்.

இவர்களின் வீடுகளில் கடவுள்களின் படங்களில்லையா? பூசைக்கென இடமில்லையா? இவர்கள் குறிகாரரர்களையும், மந்திரவாதிகளையும், சாமியார்களையும் நாடவில்லையா? இவர்களிடம் பத்தியில்லையா? அல்லது இவர்கள்தான் பூசையே செய்வதில்லையா?.....

எனவே, நாம் இப்படிப்பட்ட 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்' பற்றிக் கவலைப்படாமல்தான் செயல்பட்டாக வேண்டும். அதாவது, போலியான வாழ்க்கை வாழும் கூலிக்கார நெஞ்சமும், போலிச் சிந்தையும் உடையவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்!

இளைஞர்களைப் பற்றி மட்டும் கவலைப்பட்டால் போதும். அதன்மூலம் நமக்குத் தேவையானவர்கள் தயாராகி விடுவார்கள். அவர்களைக் கொண்டு அனைத்து வகையான செயல்திட்டங்களையும் நிறைவேற்றிடலாம்.

இதனை விளக்கமாகக் கூற வேண்டுமேயானால்; நாட்டிலுள்ள இளைஞர்களில் போராற்றலும், வீர உணர்வும் உடையவர்களைத் தேர்ந்தெடுத்துத்தான் சேனைகள் தயாரிக்கப்படுகின்றன.

அதேபோல, நமது தமிழ்மொழி, இனம், நாடு, பண்பாடு, சமயம், சமுதாயம்.... என்ற பற்றும், பாசமும், பிடிப்பும் உடையவர்கள் மட்டும் தேர்ந்தெடுத்து நம்மவர்களாக்கி அருட்சேனை தயாரித்திட்டால் போதும், அந்த அருட்சேனையே அருளாட்சி அமைப்பதிலும்; நிகழ்த்துவதிலும் முழுசத்தியாகப் பயன்பட்டிடும். எனவே, நாம், நம்மால் முடிந்தவரை நாட்டு நடப்பில் தமிழுணர்வும், சமயப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் உடையவர்களை; இளைஞர் சமுதாயத்தில் உருவாக்கும் பணியினைச் சிறப்பாக செய்ய வேண்டியவர்களே நாம்.

இதனை நம்மவர்கள் முழுமையாக உணர்ந்திட்டால்; இளைஞரல்லாத நடுத்தர வயதினரும், முதியவரும் பற்றிக் கவலைப்படாமல்; இளைஞர்களைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டுச் செயல்படக் கூடிய தரத்தையும், திறத்தையும், தீரத்தையும் வளர்த்துக் கொண்டிடுவோம் நாம்.

இந்தக் கருத்தோட்டத்தை நம்மவர்களுக்கு விளக்கியுரைக்கும் மாபெரும் பணியில் தங்களைப் போன்றவர்களால்தான் சிறப்பாகச் செயல்பட முடியும். எனவேதான், தங்களுக்கு இந்நெடிய அஞ்சல் எழுதப்படுகிறது. ...”

**// 1987 ஆகஸ்ட்டு 13ஆம் நாளில் குருதேவர் அவர்கள் பிறம்மயோகி திரு MSR மாரியப்பன் அவர்களுக்கு எழுதிய நெடிய அஞ்சலின் ஒரு பகுதி. //**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞாலுச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"...திராவிடர்கள் என்றால்:-

முத்தமிழ் மொழியைக் கற்றவர்கள்,
இந்துவேதத்தை அறிந்தவர்கள், இந்துமதத்தைப் புரிந்தவர்கள்,
இந்துவாக வாழுகின்றவர்கள், கடவுள் நம்பிக்கை உடையவர்கள்,
மத நம்பிக்கை உடைய மதவாதிகள்,
ஆதிசிவனார் முத்தமிழ் மொழியில் அருளியுள்ள இந்துவேதம் தழைக்கப் பாடுபடும் இந்து வேதியர்கள், ... ஆத்திகர்களாக வாழுகிறவர்கள், ஆன்மீக வாதிகளாக இருப்பவர்கள்,
பத்தியாளர்கள், சத்தியாளர்கள், சித்தியாளர்கள், முத்தியாளர்கள், ...
என்பதுதான் உண்மையான பொருள். ..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://gurudevar.in
https://induism.org
https://books.gurudevar.org
https://gurudevar.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-